CCE RF/PF/RR/PR/NSR/NSPR(A)/666/014

**A**

# ಮಾರ್ಚ್/ಏಪ್ರಿಲ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ – 1
## MARCH/APRIL 2024 EXAMINATION-1

Question Paper Serial No.

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]
Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 38 ]
Total No. of Questions : 38 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T**
**Code No. : 85-T**

**CCE RF/PF/RR/PR/NSR/NSPR**
**FULL SYLLABUS**

## ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ
## Subject : SOCIAL SCIENCE (சமூக அறிவியல்)

**(ತಮಿಳು ಮಾಧ್ಯಮ / Tamil Medium)**

**(ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. / ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)**

**(Regular Fresh / Private Fresh / Regular Repeater / Private Repeater / NSR / NSPR)**

ದಿನಾಂಕ : 27. 03. 2024 ] [ Date : 27. 03. 2024

ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-15 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-30 ರವರೆಗೆ ] [ Time : 10-15 A.M. to 1-30 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80 ] [ Max. Marks : 80

**பொதுவான குறிப்புகள் :**

**Cut here/ಇಲ್ಲಿ ಕತ್ತರಿಸಿ**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 38-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது ( Sealed by reverse jacket ) நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது **வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும் (அம்புகுறியிட்டு காட்டியுள்ளபடி). இடது பக்க ஓரத்தை பிரிக்கக்கூடாது**. வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.
6. மாணவர்கள் தங்கள் தேர்வு அனுமதிச்சீட்டில் ( Admission Ticket ) உள்ள குறியீடும், வினாத்தாளின் குறியீடும் ஒரே மாதிரியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**27. 03. 2024**

**Tear here**

**I. பின்வரும் வினாக்கள்/மற்றும் முழுமைப்பெறாத கூற்றுகளுக்கு *நான்கு* மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும் :**

**8 × 1 = 8**

1. பஞ்சாப் ஆங்கிலேய பேரரசுடன் இவரால் இணைக்கப்பட்டது

   (A) டல்ஹெளசி

   (B) வெல்லெஸ்லி

   (C) ராபர்ட் கிளைவ்

   (D) காரன்வாலிஸ்

2. தீன்மூர்த்தி பவன் அமைந்துள்ள இடம்

   (A) ஜோத்பூர்

   (B) மைசூர்

   (C) ஹைதராபாத்

   (D) புதுடெல்லி

3. தீபகற்ப பீடபூமியில் பெரும் அளவு பகுதியில் உள்ள மண் வகை

(A) கருப்பு மண்

(B) செம்மண்

(C) வண்டல் மண்

(D) பாலைவன மண்

4. இந்தியாவின் பசுமை புரட்சியின் தந்தை எனப்படுபவர்

(A) வர்கீஸ் குரியன்

(B) சர்.எம். விஸ்வேஸ்வரய்யா

(C) டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன்

(D) நார்மன் போர்லாக்

5. தென் இந்தியாவின் மிக உயரமான சிகரம்

(A) அர்மகோண்டா

(B) ஆனைமுடி

(C) மஹேந்திரகிரி

(D) கௌரிசங்கர்

6. 'குழந்தைகள் உதவி' எண்

(A) 1089

(B) 1098

(C) 101

(D) 108

7. ஐ.நா. சபையில் மனித உரிமைகளை பிரகடனம் செய்த ஆண்டு

(A) 1947

(B) 1945

(C) 2007

(D) 1948

8. ஒவ்வொரு ஆண்டும் உலக நுகர்வோர் தினம் கொண்டாடப்படும் நாள்

(A) மார்ச் 15

(B) டிசம்பர் 10

(C) ஜூலை 11

(D) ஜூன் 5

**II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் :** **$8 \times 1 = 8$**

9. வெல்லெஸ்லி ஏன் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு இங்கிலாந்து திரும்பினார் ?

10. முதல் உலகப் போருக்கான உடனடி காரணம் என்ன ?

11. ஐக்கிய நாடுகள் சபையின் அமைச்சரவை என்று அழைக்கப்படும் உறுப்பு எது ?

12. சமுதாய படிநிலைமுறை என்றால் என்ன ?

13. குழந்தை தொழிலாளர் தடை மற்றும் கட்டுப்பாடு சட்டம் (1986) ஏன் இயற்றப்பட்டது ?

14. கிணற்று நீர் பாசனம் மிக முக்கியமான பாசன வகையாகும் ஏன் ?

15. நிதிக் கொள்கை (பிஸ்கல்) என்றால் என்ன ?

16. "சமீக காலமாக டெலி ஷாப்பிங் பிரபலமாகிவிட்டது" ஏன் ?

**III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டிலிருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளிக்கவும் :** **8 × 2 = 16**

17. இந்தியாவில் எழுத்தறிவை அதிகரிக்க அரசாங்கம் எவ்வாறு முயற்சி செய்கிறது ?

**அல்லது**

ஐ.நா. சபையின் பாதுகாப்பு சபை எவ்வாறு உருவாக்கப்பட்டது ?

18. ஊதியம் இல்லாத வேலை ஊதியத்துடன் வேலையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது ?

**அல்லது**

கலவரத்தை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் ?

19. ஜூனாகத் இந்திய யூனியனுடன் எவ்வாறு இணைக்கப்பட்டது ?

20. ''ஆங்கிலேய ஆட்சியின் போது இந்திய இராணுவம் ஆங்கில நிர்வாகத்தின் அடித் தளமாக இருந்தது''. நியாயப்படுத்து.

21. ''இந்திய விவசாயம் பருவமழையுடனான சூதாட்டம்'' எப்படி ?

22. ஆற்றல் வளங்களின் பற்றாக்குறையத் தடுக்க தேவையான தீர்வுகளை எடுப்பது இந்தியாவில் தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஏன் ?

23. ‘‘கிராமப்புற மக்கள் நகரங்களுக்கு இடம் பெயர்வதைத் தவிர்க்கலாம்’’ எப்படி ?

24. பணத்தை சேமிக்க அஞ்சல் அலுவலகங்கள் எவ்வாறு உதவுகின்றன ?

**IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் :**

**9 × 3 = 27**

25. வங்கிகள் வாடிக்கையாளருக்கு ஆற்றும் சேவைகள்யாவை ?

**அல்லது**

ஒரு நபர் தொழில் முனைவோர்க்கான தகுதியைப் பெறுவதற்கு கொண்டிருக்க வேண்டிய பண்புகள் யாவை ?

26. பக்சார் போரின் விளைவுகள் கிழக்கிந்திய கம்பெனி எவ்வாறு பாதித்தது ?

**அல்லது**

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் புரட்சியாளர்களின் போராட்ட முறைகள் எப்படி வேறுபட்டிருந்தது ?

27. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் போக்குவரத்து எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கிறது ?

**அல்லது**

இந்தியாவில் தொழிற்சாலைகளின் இடஅமைப்பின் தாக்கத்தை தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?

28. பொது நிதியின் முக்கியத்துவத்தை விளக்கவும்.

**அல்லது**

அறுவடைக்கு முந்தைய மற்றும் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பம் எப்படி பசுமைப்புரட்சிக்கு வழிவகுத்தது. விளக்குக.

29. ''மைசூர் மாநிலத்தின் வளர்ச்சிக்கு திவான் கெ.சேஷாத்திரி அய்யர் ஒரு முக்கியப் பங்கு வகித்தார்''. நியாயப்படுத்தவும்.

30. ''அன்னிபெசன்ட் அம்மையார் பிரம்மஞானசபையின் செயல்பாடுகளுக்கு புத்துயிர் அளித்தார்'' நியாயப்படுத்தவும்.

31. ‘‘ஆரம்பகாலத்திலிருந்தே ரஷ்யாவுடன் இந்தியா நல்லுறவைக் கொண்டுள்ளது’’ விளக்கவும்.

32. இந்தியாவில் வேலையில்லா திண்டாட்டம் ஏன் ஏற்படுகிறது ?

33. பாலைவன காடுகளிலிருந்து பசுமைமாறா காடுகள் எவ்வாறு வேறுபடுகின்றன ?

**V. <u>பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் :</u>**

**4 × 4 = 16**

34. ஜாலியன் வாலாபாக் படுகொலையை விளக்கவும்.

*அல்லது*

இந்தியாவில் ஆங்கிலேய கல்வி முறையின் தாக்கத்தை விளக்கவும்.

35. முதல் இந்திய சுதந்திரப் போர் தோல்வியடைந்தது. ஏன் ?

36. ‘‘அண்மைகாலமாக இந்தியாவில் பெண்களின் நிலை மேம்பட்டு வருகிறது’’ நியாயப்படுத்தவும்.

37. ‘‘புயல் காற்றுகள் அபாயகரமானவை’’ நியாப்படுத்தவும்.

**VI.** 38. <u>இந்திய தரைப் ( **Outline** ) படத்தை வரைந்து கீழ்க்காண்பவற்றைக் குறிக்கவும்.</u> **1 + 4 = 5**

a) $23\frac{1}{2}^{o}$ வடக்கு அட்சரேகை

b) நர்மதை நதி

c) விசாகப்பட்டணம்

d) அமிர்தசரஸ்

<u>*பார்வைத் திறன் அற்றோர்க்கான வினா :* **(வினா எண் 38 க்கான மாற்று வினா)**</u> **5**

பல்நோக்கு நதி பள்ளத்தாக்கு திட்டங்களின் முக்கிய நோக்கங்களை குறிப்பிடுக.

DO NOT WRITE ANYTHING HERE